# ஜெயங்கொண்டம் நகராட்சி

| DATE OF MEETING OF THE COUNCIL | MCR NO | SERIAL NUMBER AND SUBJECT IN AGENDA | DECISION OF THE COUNCIL |
|---|---|---|---|
| | | **நகர் மன்ற அவசரக் கூட்டம்**<br>**ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2023 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 23.06.2023 ஆம் தேதி வெள்ளி கிழமை காலை 11.00 மணி அளவில் நடைபெற உள்ள சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்**<br>**முன்னிலை :**<br>**நகர் மன்றத் தலைவர்,**<br>ஜெயங்கொண்டம் நகராட்சி | |
| 23.06.2023 | 55 | **பொருள்.1**_ஆணையர் அவர்களின் மே – 2023 ம் மாதாந்திர நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கு. | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 23.06.2023 | 56 | **பொருள்.2** ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 ல் உள்ள கரடிகுளம் மேல்நிலை நீர்தேக்கதொட்டியில் கான்கீரிட் படிக்கட்டுகள் முழுவதும் உடைந்து சேதம் அடைந்துள்ளதால், நீர்தேக்கதொட்டியை சுத்தம் செய்து, பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள முடிவதில்லை. ஏனவே நீர்தேக்கதொட்டி பராமரிப்பு பணிகள் செய்து புதிய இரும்பிலான ஏணி அமைக்க ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண் : 4444/2021/ இ1** | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 23.06.2023 | 57 | **பொருள்.3** ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.09 ல் உள்ள காந்திநகர் மேல்நிலை நீர்தேக்கதொட்டியில் கான்கீரிட் படிக்கட்டுகள் முழுவதும் உடைந்து சேதம் அடைந்துள்ளதால், நீர்தேக்கதொட்டியை சுத்தம் செய்து,பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள முடிவதில்லை. ஏனவே நீர்தேக்கதொட்டி பராமரிப்பு பணிகள் செய்து புதிய இரும்பிலான ஏணி அமைக்க ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 3,50,000 /–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண் :4444/2021/ இ1** | **மன்றத்தின்** அனுமதி வழங்கலாம். |
| 23.06.2023 | 58 | **பொருள்.4 தென்மேற்கு பருவமழையினால் நகராட்சிப் பகுதிகளில் உள்ள மழை நீர் செல்லும் கால்வாய் மற்றும் ஏரி குளங்களின் நீர் வரத்து பாதைகளை சரி செய்ய ஏதுவாக ஜே. சி. பி. வாகனத்தின் ( பதிவு எண் – TN - 61 J 2094 ) பக்கெட் பின் புஷ் , ஸ்டெபிளைசர் வேலை , ப்ரண்ட் ஆக்ஸிர் வேலை , புதிய பேட்டரி மற்றும் ஆல் ஆயில் சர்வீஸ் பழுதுப் பணிகளை சரி செய்ய உதிரி பாகங்கள் மற்றும் ஆள்கூலி உட்பட அரசு அங்கீகாரம் பெற்றTATA HITACHI, திருச்சி நிறுவனத்தின் விலைப்புள்ளியின் அடிப்படையில் ,** | மன்றம் பதிவு செய்யப்படுகிறது |

| | | | |
|---|---|---|---|
| | | செலவினத் தொகை ரூ. 90,000/−க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**<u>ந.க.எண். 4088/ 2023 / இ1</u>** | |
| 23.06.2023 | 59 | **பொருள்.5** தென்மேற்கு பருவமழையினால் நகராட்சிப் பகுதிகளில் உள்ள மழை நீர் செல்லும் கால்வாய் மற்றும் ஏரி குளங்களின் நீர் வரத்து பாதைகளை சரி செய்ய ஏதுவாக TMX HITACHI என்ற வாகனத்திற்கு பக்கெட் பின் புஷ் , ஸ்டெபிளைசர் வேலை , ப்ரண்ட் ஆக்ஸிர் வேலை , புதிய பேட்டரி மற்றும் ஆல் ஆயில் சர்வீஸ் பழுதுப் பணிகளை சரி செய்ய உதிரி பாகங்கள் மற்றும் ஆள்கூலி உட்பட அரசு அங்கீகாரம் பெற்ற TATA HITACHI , திருச்சி நிறுவனத்தின் விலைப்புள்ளியின் அடிப்படையில், செலவினத் தொகை ரூ. 80,000−க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**<u>ந.க.எண். 4089/ 2023 / இ1</u>** | மன்றம் அனுமதி வழங்கபடுகிறது |
| 23.06.2023 | 60 | **பொருள்.6** இந்நகராட்சியில் 21 வார்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் மூலம் டெங்கு கொசு புழு ஒழிப்பு பணிக்கு (DBC) 44 பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். தற்போது ஒப்பந்த காலம் 30.04.2023 ல் முடிவடைவதால் டெங்கு காய்ச்சல் வந்துள்ளதாலும் தொடர்ந்து மேற்கண்ட தனியார் நிறுவனம் மூலம் (DBC) பணியாளர்களை கொண்டு வீடு வீடாக சென்று கொசு புழு ஒழிப்பு பணியினை மேற்கொள்ள 01.05.2023 முதல் 31.06.2023 வரை 2 மாதம் கால நீடிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி 21.04.2023 தேதிய நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொண்டதையும் மற்றும் ஊதியம் வழங்கியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**<u>ந.க.எண். 834/2016/அ3</u>** | மன்றம் அனுமதி வழங்கபடுகிறது |
| 23.06.2023 | 61 | **பொருள்.7** இந்நகராட்சியில் 21 வார்டுகளில் உள்ள குடிநீர் இணைப்பு இல்லாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு உள்ளதாகவும், இடிந்துள்ள கட்டிடத்தில் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டும் நீண்டகாலமாக பயன்பாடு இல்லாத கட்டிடத்திற்கு குடிநீர் இணைப்பு கேட்பு உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளதினை குழாய் ஆய்வர் மூலம் கணக்கீடு செய்தும் ஆய்வு செய்து 2022−2023 ஆம் ஆண்டில் 21 வார்டுகளில் நீக்கம் செய்யப்பட வேண்டிய பட்டியல் தயார் செய்யப்பட்டு ரூ.3,25,570/− நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. அனுமதி வழங்கலாம். | மன்றம் அனுமதி வழங்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| | | 2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கேட்பினை நீக்கம் செய்ததினை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண் :214/2016/அ1** | |
| 23.06.2023 | 62 | **பொருள்.8** இந்நகராட்சி வரியில்லா இனங்கள் பேருந்து நிலையத்தில் உள்ள கடைகள் பழுதடைந்ததினால் இடிக்கப்பட்டு புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டதினால் கடைகள் அனைத்தும் காலி செய்யப்பட்டுள்ளன. மேலும் நீண்ட நாட்களாக செலுத்தப்படாமல் நிலுவையிலும் உள்ள தொகையினையும் பேரூராட்சி காலத்தில் உள்ள வரியில்லா இனத்தொகையினை தற்பொழுது வசூல் செய்ய வழிவகை இல்லாத காரணத்தினாலும், நடப்பாண்டில் உள்ள நிலுவையினை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருவதினை ஏற்றும் பயன்பாடின்றி உள்ள குத்தகை இனங்களின் நிலுவைத்தொகை ரூ.16,75,434/– நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. அனுமதி வழங்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கேட்பினை நீக்கம் செய்ததினை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண் :214/2016/அ1** | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 23.06.2023 | 63 | **பொருள்.9** இந்நகராட்சியில் 21 வார்டுகளில் உள்ள தொழில்வரிகளில் தொழில்வரி விதிக்கப்பட்டு இனங்களை வார்டுவாரியாக கணக்கிடப்பட்டதில் தற்பொழுது அந்த இடங்களில் வரிவிதிக்கப்பட்ட இனங்களுக்கு தொழில் நடைபெறாமலும், காலியாக உள்ளதாலும் வேறு ஒரு தொழில் நடைபெறுவதால் அன்னாருக்கு வேறுபெயரிலும் வேறு நிறுவனத்தின் பெயரிலும் தொழில்வரி விதிக்கப்பட்டு வருவதினால் அந்த இனங்கள் அனைத்தும் வருவாய் உதவியாளர்களினால் கண்டறியப்பட்டு 2022–2023 ஆம் ஆண்டில் 21 வார்டுகளில் நீக்கம் செய்யப்பட வேண்டிய பட்டியல் தயார் செய்யப்பட்டு ரூ.31,34,186/– நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. அனுமதி வழங்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கேட்பினை நீக்கம் செய்ததினை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண் :214/2016/அ1** | மன்றம் அனுமதி வழங்கபடுகிறது. |
| 23.06.2023 | 64 | **பொருள்.10** இந்நகராட்சியில் 21 வார்டுகளில் உள்ள வீட்டுவரிகளில் பழைய வீட்டினை இடித்து புதிய வீடு கட்டி இருக்கும் பட்சத்தில் பழைய வரியினை நீக்கம் செய்யாமலும் வீடு இடிக்கப்பட்டு காலிமனை விதிக்கப்பட்டு பழைய | மன்றத்தின் அனுமதி வழங்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| | | சொத்துவரியினை நீக்கப்படாமலும் உள்ளதினால் அந்த இனங்கள் அனைத்தும் வருவாய் உதவியாளர்களினால் கண்டறியப்பட்டு 2022-2023 ஆம் ஆண்டில் 21 வார்டுகளில் நீக்கம் செய்யப்பட வேண்டிய பட்டியல் தயார் செய்யப்பட்டு ரூ.11,43,650/- நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு**<br>1. அனுமதி வழங்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கேட்பினை நீக்கம் செய்ததினை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண் :214/2016/அ1** | |
| 23.06.2023 | 65 | **பொருள்.11** இந்நகராட்சியில் 21 வார்டுகளில் உள்ள காலிமனைகளில் வரிவிதிப்பு செய்யப்பட்ட இனங்களில் கட்டிடம் கட்டப்பட்டும் காலிமனை வரியினை நீக்கம் செய்யாமல் தொடர்ந்து வருவதினால் அந்த இனங்கள் அனைத்தும் வருவாய் உதவியாளர்களினால் கண்டறியப்பட்டு 2022-2023 ஆம் ஆண்டில் 21 வார்டுகளில் நீக்கம் செய்யப்பட வேண்டிய பட்டியல் தயார் செய்யப்பட்டு ரூ.36,40,076/- நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு**<br>1. அனுமதி வழங்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கேட்பினை நீக்கம் செய்ததினை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண் :214/2016/அ1** | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 23.06.2023 | 66 | **பொருள்.12** சென்னை உயர்நீதி மன்றம், ஜெயங்கொண்டம் மாவட்ட உரிமையியல் நீதி மன்றம் மற்றும் ஜெயங்கொண்டம் சார்பு நீதி மன்றம் ஆகியவைகளில் உள்ள நகராட்சிக்கு எதிரான வழக்குகளுக்கு வக்காலத்து, எதிர்வாதுறை மற்றும் வழக்காடு கட்டணமும் செலுத்துவதற்கு உத்தேச கட்டணம் ரூ. 3,00,000/- (மூன்று லட்சம்) அனுமதி கோரி நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு ;<br>மன்றம் அனுமதிக்கலாம் .<br>**ந.க.எண் :1210/2023/எப்1** | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 23.06.2023 | 67 | **பொருள்.13** ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையர், ஈப்பு வாகனம் TN-61 J 7078 நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் தஞ்சாவூர், மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அரியலூர் ஆய்வு கூட்டம் சென்று வருவதற்கும் மற்றும் இதர பயன்பாடுகள் காலை வேலைகளில் திடக்கழிவு மேலாண்மை, காலை உணவு திட்டம், மற்றும் இதர திட்ட பணிகள் போன்ற அன்றாட பணிகள் மேற்ப்பார்வை செய்யவும் | மன்றத்தின் அனுமதி வழங்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட வாகனத்திற்கு ஆல் ஆயில் சர்விஸ், பிரேக் வேலைகள் , கிளட்ச், ஏசி சர்விஸ், எலட்ரிக்கள் வேலை மற்றும் இதர பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பணி மனையிலிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளி பட்டியலின் அடிப்படையில் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.60,000 /– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிவழங்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிமேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>**<u>ந.க.எண்.4265–2 /2021/இ1</u>** | |
| 23.06.2023 | 68 | **பொருள்.14** ஜெயங்கொண்டம் நகராட்சி பொறியாளர், ஈப்பு வாகனம் TN-46 E 4296 நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் தஞ்சாவூர், மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆய்வு கூட்டம் சென்று வருவதற்கும், காலை வேலைகளில் குடிநீர் மற்றும் இதர திட்ட பணிகள் போன்ற அன்றாட பணிகள் மேற்ப்பார்வை செய்ய பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட வாகனத்திற்கு ஆல் ஆயில் சர்விஸ், பிரேக் வேலைகள் , கிளட்ச், எலட்ரிக்கல், சஸ்பென்சன் வேலை மற்றும் இதர பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பணி மனையிலிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளி பட்டியலின் அடிப்படையில் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.1,00,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதிவழங்கலாம்.<br>**<u>ந.க.எண். 3761 / 2021 / இ1</u>** | மன்றத்தின் அனுமதி வழங்கப்படுகிறது. |
| 23.06.2023 | 69 | **பொருள்.15** ஜெயங்கொண்டம் நகராட்சி அலுவலக கட்டிடத்தில் தரைதளத்தில் உள்ள ஆணையர்அறையில் உள்ள கழிப்பிடம் மற்றும் அலுவலக பணியாளர்கள் உபயோகிக்கும் பொது கழிப்பிடத்தில் குலோசெட் மற்றும் பைப் லைன்களில் அடைப்பு ஏற்பட்டு பொது மக்கள் உபயோகப்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் அவற்றை சீர் செய்யவும், மேலும் ஆணையர் பயன்படுத்தும் அறையில் இரண்டு புதிய மின் விசிறி, ஒரு மின் விளக்கு புதியதாக அமைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே பொது கழிப்பிடம் மற்றும் ஆணையர் அறையில் இரண்டு புதிய மின் விசிறி, ஒரு மின் விளக்கு புதியதாக அமைக்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 1,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .<br><u>அலுவலக குறிப்பு</u> ;<br>மன்றம் அனுமதிக்கலாம் .<br><u>ந.க.எண் :**4444./2021/இ1**</u> | மன்றம் அனுமதி வழங்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 23.06.2023 | 70 | **பொருள்.16** இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனங்களை மினி லாரி எண். TN61 C 4087 மற்றும் டாடா ஏசி TN61 H 6984 ஆகிய இரு வாகனங்களை பழுது நீக்கம் சரி செய்யவும், வாகன தகுதி சான்று பெறவும் உத்தேச செலவினம் ரூ.5.00 (இலட்சத்திற்கு) மேற்படி தொகையை வருவாய் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மேற்படி பணி சுகாதார பணி என்பதால் பொதுமக்களின் நலன் கருதி உள்ளதாலும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 54712021/எச்1** | **மன்றம்** அனுமதி வழங்கலாம். |
| 23.06.2023 | 71 | **பொருள்.17** ஜெயங்கொண்டம் நகராட்சியில் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் மற்றும் குடிநீர் பணியாளர்கள் பணியிடத்தில் 13 தினக்கூலி பணியாளர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் திரு. கோ.சேகர், ஒப்பந்தகாரர், ஜெயங்கொண்டம் என்பவர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்த காலம் 30.06.2023 உடன் முடிவடைகிறது. எனவே, நிர்வாக நலன் கருதி, மேற்கண்ட ஒப்பந்தத்தை 01.07.2023 முதல் 31.08.2023 வரை கால நீட்டிப்பு செய்ய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதிப்படி தினக்கூலியினை வழங்கவும் அதற்கான செலவினத் தொகை ரூ.3,91,844/—ஐ நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>குடிநீர் பணியின் அவசியத்தை கருதி, மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.746 /2015 /இ1** | **மன்றம்** அனுமதி வழங்கலாம். |
| 23.06.2023 | 71 | **பொருள்.18 ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 10—ல் காமராஜபுரத்தில் உள்ள சிறுபாலம் முற்றிலும் சேதமடைந்து கழிவுநீர் சாலைகளில் செல்வதாலும் பொதுமக்கள் சாலையில் செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே பொதுமக்கள் கோரிக்கையினை ஏற்று புதியதாக RCC சிறுபாலம் அமைக்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 3,00,000—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .**<br>அலுவலக குறிப்பு ;<br>**1, மன்றம் அனுமதிக்கலாம் .**<br>ந.க.எண் : **3644/2021/இ1** | மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது |
| 23.06.2023 | 72 | **பொருள்.19 ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட பொது மக்களுக்கு நகராட்சியால் சுத்திகரிக்கப்பட்ட சுகாதாரமான குடிநீர் இந்நகராட்சியால் பராமரிக்கப்படும் 70 ஆழ்துளை கிணறுகள்மூலம் 1,44 MLD மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் 1,44 MLD ஆக மொத்தம் 2.88 MLD குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது . இதில் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் வழங்க வேண்டிய 1.44 MLD குடிநீர் மின்தடை மற்றும் பிரதான குழாய் உடைப்பு ஏற்படுவதால் , குடிநீர் வழங்குவது குறைந்துவருகிறது. மேலும் இந்நகராட்சியால் பராமரிக்கப்படும் ஆழ்துளை கிணறுகளில் உள்ள மின்மோட்டார்கள் அவ்வப்போது பழுது ஏற்படுவதாலும் அதனை சரிசெய்ய ஏற்படும் காலதாமதத்தை** | மன்றம் அனுமதி வழங்கப்படுகிறது |

| | | | |
|---|---|---|---|
| | | கருத்தில் கொண்டு இந்நகராட்சி பகுதிகளில் வாழும் பொதுமக்களுக்கு அத்தியாவசியமான குடிநீர் தேவையை பூர்த்தி செய்திடவும், மேலும் நகர்மன்ற தலைவர், துணை தலைவர், உறுப்பினர்கள், நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் அவர்களின் அறிவுரைப்படியும் நகராட்சி வசம் குடிநீர் லாரி இல்லாத காரணத்தினால் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு தனியார் டேங்கர் டிராக்டர் மூலம் , குடிநீர் உடனடியாக வழங்க இயலாத பகுதிகளில் விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 2.00 /- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,<br>அலுவலக குறிப்பு ;<br>1, மன்றம் அனுமதிக்கலாம் .<br>ந.க.எண் : 3644/2021/இ1 | |

ஆணையர்,
ஜெயங்கொண்டம் நகராட்சி